Vol : 9
இயேசுகிறிஸ்துவே கர்த்தர்
Issue : 1
Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

NOVEMBER 2008

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை

✝ நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் ✝




TVGM - 2008 நவம்பர்

கர்த்தரின் வாக்குத்தத்தம்

**சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.**

ஏசாயா 35 : 10

கர்த்தருடைய கிருபையினாலும் அநேகருடைய ஜெபத்தினாலும் புதுக்கோட்டை மாவட்டம் – **அண்டக்குளம் St.John's** இயேசுகிறிஸ்துவின் பேழை ஜெபவீடு தேவனுடைய மகிமைக்கென்று **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** மற்றும் **சகோ. டேனியல் பிரதீப்** மூலம் **02.10.2008** அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.



Thanks:*Bro.Abraham E.Samuel & Family*

**இயேசு கிறிஸ்துவே கர்த்தர்**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 09.10.08.



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவனுடைய பெரிதான கிருபையாலும், உங்கள் அனைவருடைய ஜெபத்தினாலும் என்னுடைய **Intercultural Studies** - ஐ **Wheaton College, USA** - ல் முடித்து பட்டமளிப்பு விழாவிலும் கலந்து கொண்டு, சுகத்தோடு 30.09.2008 அன்று திருச்சிக்கு திரும்பி வரவும், TVGM நடு இரவு ஜெபத்தில் சாட்சி கொடுக்கவும், 01.10.2008ல் நடைபெற்ற துதிஆராதனையில் கலந்துகொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

2008 அக்டோபர் 2 ம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் – **அண்டக்குளத்தில்** கட்டப்படுள்ள ஜெபவீட்டை திறந்து வைக்கவும், தேவ ஆலோசனையை பகிர்ந்து கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார்.

2008 நவம்பர் முதல் TVGM ஊழியத்தின் முழு பொறுப்பையும் ஏற்று நடத்த தேவனுடைய கிருபை, வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,
***Stephen Christopher.***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| அண்டக்குளம் ஜெபவீடு பிரதிஷ்டை | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| வாக்குத்தத்த செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| தேனி – ஆண்டிப்பட்டி யூனியன் 100 கிராம ஊழியம் நோட்டீஸ் | 9 |
| ராசிபுரம் யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை இயேசுவை விரும்புவோர் முகாம் | 10 -13 |
| சாட்சிகள் | 14 |
| TVGM ஸ்தாபகரிடமிருந்து | 15 |
| AJC நடமாடும் சுவிசேஷக்குழு 100–கிராம ஊழிய அறிக்கை | 16,17 |
| TVGM Website துதி ஆராதனை | 18 |
| நாட்டு நடப்புச் செய்திகள் தினசரி ஜெபக்குறிப்புகள் | 19 |
| காணிக்கை அனுப்பும் முறை அறிமுகப்பணி ஊழிய அறிக்கை | 20 |
| போட்டோ ( ஜெப வீடு கட்டுவதற்கான நிலம் ) | W 3 |
| சிறுவர் இல்லம் தொடர்பு முகவரி | W 4 |

நவம்பர்
வாக்குத்தத்த
செய்தி

# சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். ஏசாயா 35 : 10

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என் அன்பு தேவனுடைய பிள்ளையே!

கர்த்தருடைய வசனம் சொல்கிறது:

**சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்**

சஞ்சலத்தோடிருக்கும் அன்பு நண்பரே!

**நீதிமொழிகள் 14:13** கூறுகிறது :

**நகைப்பிலும் மனதுக்குத் துக்க முண்டு; அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்.**

**பிரசங்கி 1:14** கூறுகிறது :

**சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.**

**ஆதி 47:9 :** அதற்கு யாக்கோபு: என் ஆயுசுநாட்கள் கொஞ்சமும் சஞ்சல முள்ளதுமாயிருக்கிறது.

நகைப்பிலும் கூட மனதுக்குத் துக்கமுண்டு. அந்த மகிழ்ச்சியின் முடிவோ சஞ்சலம் என்பதை இந்த வசனங்கள் நமக்கு உணர்த்துகின்றன. எத்தனையோ முறை, உதட்டிலே நீ சிரிக்கிறாய்.ஆனால் உள்ளமோ துக்கித்து போய் உள்ளது. மற்றவர்கள் உன்னைப் பார்த்து **' இவர்களுக்கு என்ன குறை ?** என பேசிக் கொள்கிறார்கள். ஆனால் உங்கள் உள்ளமோ நொந்து, வெந்து வாடிக்கொண்டேயிருக்கிறது.

**யோபு கூறுவதைப் பாருங்கள்.**

**யோபு 17:7** இதினிமித்தம் என் கண்கள் சஞ்சலத்தினால் இருளடைந்தது.

சஞ்சலம் பெருக, பெருக, கண்கள் இருளடைகிறது.

ஆதலால் **யோபு கூறுகிறார்:**

**யோபு 6:2**_என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். யோபுவைப் போல மன வேதனையோடு நீங்களும் சொல்லவில்லையா ?

பின்வருமாறு உங்கள் உள்ளத்தில் அடிக்கடி நினைக்கவில்லையா ?

**ரோமர் 7:24** நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்.

**எரேமியா 8:18** நான் சஞ்சலத்தில் ஆறுதலடையப் பார்த்தும், என் இருதயம் பலட்சயமாயிருக்கிறது.

**எரேமியா 20:18** நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு, என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன ?

அடிக்கடி **" நான் ஏன் பிறந்தேன், ஏன் உயிரோடு இருக்கிறேன்** என சஞ்சலத்தோடு கூறும் என் அன்பு சகோதரியே, சகோதரனே!

உங்களுக்காகவே தேவனுடைய வார்த்தை கடந்து வருகிறது.

**சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.**

தேவனை இதயத்திலே, துதித்துக் கொண்டிருக்கும் சகோதரனே, உன்னை அறியாமலே உன்னுடைய நீதியைக் குறித்து மேன்மை பாராட்டிக்கொண்டிருக்கும் சகோதரியே!

**பிரசங்கி 8:6 கூறுகிறது:–** எல்லாக் காரியத்துக்கும்,காலமும்,நியாயமுமுண்டு.

ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி.

முதலாவது உங்கள் சஞ்சலத்துக்கு நியாயமுண்டு என உணருங்கள். இரண்டாவதாக எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு என நம்புங்கள்.

எந்நாளும் இப்படியே சஞ்சலத்தோடு இருக்க மாட்டீர்கள்.

**பிரசங்கி 3:4** அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு.

தேவையில்லாத பிரச்சனைகளில் தலையிட்டு மீண்டும் மீண்டும், சஞ்சலத்தையும் தீங்கையையும் சம்பாதித்துக் கொண்டிருக்கும் வாலிப சகோதரனே, சகோதரியே!

**பிரசங்கி 11:10** கூறுகிறது: நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப் போடு; இளவயதும் வாலிபமும் மாயையே.

என் அன்பு வாலிப சகோதரனே, சகோதரியே! நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், தீங்கையும் நீக்கிப்போடு

**நீதிமொழிகள் 28:13** கூறுகிறது தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

ஆதலால் நீ தேவனுக்கு மறைக்காமல் அறிக்கை செய்து விட்டுவிடு.

**1யோவான் 1:7** இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

**சஞ்சலத்துக்கு மற்றும் ஒரு காரணம் பொருளாசையல்லவா?**

**நீதிமொழிகள் 15:16 கூறுகிறது: –**
சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப்பொருளே உத்தமம்.

உனது சஞ்சலத்துக்கு காரணம் என்ன? பொன்னா? பொருளா? நிலமா? வேலையா? பிள்ளையா? குடும்பமா? அறியாமையாலே செய்த தவறா? அறிந்து செய்த தவறா? எதுவாகவும் இருக்கட்டும்.

இந்த மாதத்தில் **கர்த்தர் உனக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்:–**

**சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.**

சஞ்சலம் மட்டும் அல்ல, தவிப்பும் ஓடிப்போம் என கர்த்தர் வாக்களிக்கிறார்.

**சஞ்சலம் என்பது தனக்குள் தானே நொந்து கொள்ளும் செயல்.**

**ஆனால் தவிப்பு என்பது தப்பித்து ஓட வழியில்லாமல் இருப்பது.**

**புலம்பல் 3:19** எட்டியும் பிச்சுமாகிய என் சிறுமையையும் என் தவிப்பையும் நினைத்தருளும்.

இன்றைக்கு அநேகர் அநேக பிரச்சனைகளில் இருந்து எப்படி தப்புவித்துக் கொள்வது என்று தெரியாமல் திகைக்கிறார்கள்.

**சங்கீதம் 38:9** ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை.

**சங்கீதம் 31:10** என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று; என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்து போயிற்று.

**எபேசியர் 6:12** மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் . . . நமக்கு போராட்டம் உண்டு.

இதைத்தான் **நீதிமொழிகள் 29:2 கூறுகிறது:**

நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; துன்மார்க்கர் ஆளும் போதோ ஜனங்கள் தவிப்பார்கள்.

**ஏசாயா 24:4** தேசம் புலம்பி வாடும்; பூமி சத்துவமற்று உலர்ந்துபோகும்; தேசத்து ஜனத்திலே உயர்ந்தவர்கள் தவிப்பார்கள்.

**யாத். 2:23** இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. அல்லேலுயா.

அடிமை வேலை செய்கிறேன் என அங்கலாய்க்கும் உதவி ஊழியரே, தேவ பிள்ளையே! உங்களுடைய சத்தம் தேவ சந்நிதியில் எட்டிவிட்டது.

வேலை செய்யும் இடத்தில் அடிமையாக நடத்தப்படுகிறேனே என வேதனையோடு கதறும் தேவனுடைய பிள்ளைகளே! உங்களுடைய சத்தம் தேவ சந்நிதியில் எட்டிவிட்டது.

தகுதிக்கு தகுந்த வேலையில்லையே, ஊழியம் இல்லையே, வருமானம் இல்லையே, கௌரவம் இல்லையே என அங்கலாய்க்கும் சகோதர, சகோதரிகளே! உங்களுடைய சத்தம் தேவனுடைய சமுகத்தில் எட்டிவிட்டது.

ஆதலால் **சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.** ஆமென்.

மிக முக்கியமாக ஒரு காரியத்தை எழுதுகிறேன். எத்தனை விளக்கங்களை நாம் கூறினாலும், வசனம் என்ன சொல்கிறது:

<u>ஏசாயா 35:10</u> கர்த்தரால் **மீட்கப்பட்டவர்கள்** திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; **சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.**

யாருக்கு நித்திய மகிழ்ச்சி, சந்தோஷம்? யாருக்கு சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்?

ஒரே பதில் **"கர்த்தராலே மீட்கப்பட்டவர்கள்"** அல்லேலுயா.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே! நீங்கள் கர்த்தராலே மீட்கப்பட்டிருக்கிறீர்களா? உங்களுக்கு மீட்பின் சந்தோஷம் வேண்டுமா?

**யோபு கூறுகிறார்:– 'என் மீட்பர் உயிரோடிருக்கிறார்'.**

நாம் ஆராதிக்கும் மீட்பர் உயிரோடிருக்கிறார் பாவத்திலும், சாபத்திலும், மரித்துப்போன நம்மை மீட்கவே நம்முடைய மீட்பர் தன்னுடைய ஜீவனை தந்து மீட்பை உண்டு பண்ணினார்.

ஊக்கமான ஜெபத்தால் அனுதினமும் பாவ அறிக்கை செய்து, நம்மை நாமே நிதானித்து அறிந்து தேவனுடைய சித்தத்திற்காக காத்திருந்து தேவனுடன் உறவு கொள்ளும்போது **"சஞ்சலமும், தவிப்பும் ஓடிப் போகிறது"** தாங்கிக் கொள்ளும் பெலனைத் தருகிறார். தப்பிக்கொள்ளக் கூடிய வழியை உண்டாக்குகிறார். தேவ சித்தத்தை ஏற்றுக் கொள்ளும் கிருபையை அளிக்கிறார்.

இந்த மாதத்தில் பின்வருமாறு அடிக்கடி உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**இயேசுவின் நாமத்தினால் என்னுடைய சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.**

**இயேசுவின் நாமத்தினால் என்னுடைய சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.** மீண்டும், மீண்டுமாக விசுவாச அறிக்கை செய்யுங்கள்.

**சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.**

**<u>பக்தன் பாடுகிறார்:</u>**

**வறண்ட வாழ்க்கை செழித்திடுதே**
**தூய தேவ அருளால்**
**நித்திய மகிழ்ச்சி தலைமேலிருக்கும்**
**சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.**
**இந்த தேவன் என்றென்றுமுள்ள**
**சதாகாலமும் நமது தேவன்**
**மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்**
**அநாதி தேவன் உன் அடைக்கலம்**
**அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரம்.**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**
**ஆமென்!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## கரூர் மாவட்டம் - தோகைமலை யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2008 நவம்பர் 10** திங்கள் காலை 9 மணி முதல் **நவம்பர் 14** வெள்ளி மதியம் 3 மணி முடிய **தோகைமலை யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 நவம்பர் 10** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 நவம்பர் 14** வெள்ளி மதியம் **1 - 3** முடிய

**( 2008 நவம்பர் 10 - 14 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**PR. ஞானதாஸ், இரக்கத்தின் பேழை சர்ச்.**
**ரெங்கா நகர், ஆர்ச்சம்பட்டி, கரூர் - 621313**

**தேவசெய்தி**
**( நவம்பர் 14 மதியம் 2 மணி )**
**பாஸ்டர் விக்கி, Elim Tamil Ministry Nz**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த Pr. **ஞானதாஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# நாமக்கல் - ராசிபுரம் யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

## THANKS: PATMOS ( DR. TOR & SIS.FERA )



கர்த்தருடைய கிருபையால், **நாமக்கல் மாவட்டம் – ராசிபுரம்** யூனியனில் 15.09.2008 முதல் 19.09.2008 வரை **100– கிராம ஊழியம்** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசி நாள் கூடுமிடம் உணவு, இனிப்பு இவைகளை **ராசிபுரம்** A.G. சபை **பாஸ்டர் C.ரவி ஜான்சன்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

இந்த ஊழியத்தில் தமிழ்நாட்டின் 16 மாவட்டங்களிலிருந்து 58 கிராம ஊழியர்கள் வந்து கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல்நாள் ஆரம்ப ஜெபத்தில் ராசிபுரம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் TVGM–ல் வேதாகமப்பள்ளியில் படித்து இன்று வையப்ப மலையில் ஊழியராக உள்ள பாஸ்டர் பவுல் தனது சாட்சியைக் கூறினார். அநேகருக்காக ஜெபித்தார். ஸ்தாபகர் **P.T. கிறிஸ்டோபர்** கிராம ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். ராசிபுரம் A.G. சபை **பாஸ்டர் C.ரவி ஜான்சன்** தேவசெய்தி கொடுத்தார்கள்.

பின்பு கிராம ஊழியர்களை 12 குழுவாகப் பிரித்து, அவர்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவுக்குப் பிறகு கிராமங்களுக்குள் ஜெபித்து அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் போய் 5 நாட்கள் கிராமங்களில் தங்கிக் கொண்டு இலவசமாக சுவிசேஷப்புத்தகங்கள் கொடுத்து தேவநாமத்தை பிரஸ்தாபப் படுத்தினார்கள். மொத்தம் 11,585 யோவான் சுவிசேஷம் 22,000 கைப்பிரதி, 10,000 சிலுவைக்கொடிகள் கொடுத்தனர்.



இப்படி 5 நாட்கள் ஊழியங்களை முடித்து மீண்டும் முன்பு கூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை எப்படி கிராமங்களில் நடத்தினார் என்று ஊழிய அனுபவங்களை சாட்சியாக கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த ஜெபத்தில் **பாஸ்டர் பவுல்** அவரது மனைவி **ரீட்டா பவுல்** ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் சாட்சியை கூறினார்கள். **பாஸ்டர் ரவி ஜான்சன்** செய்தியளித்தார்கள். கிராம ஊழியர் களுக்கு பிரயாணப்படியும் இனிப்பும் வழங்கப் பட்டது. இரவு உணவுக்குப் பின் அவரவர் ஊர்களுக்கு திரும்பி போனார்கள்.

இவ்ழியத்தின் போது 237 பேர் தங்கள் விலாசங்களைக் கொடுத்து தங்களுக்காக ஜெபிக்கும்படியும், தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார்கள்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**<u>குழு 1:</u> சகோதரி கஸ்தூரி , ரூத், மேரி மீனா,எஸ்தர் பேபி,மரியம்மாள்.**

எங்களுக்கு கொடுத்திருந்த 9 கிராமங்களிலும் வீடுவீடாக யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். காக்காவேரி புதிய குடியிருப்பில் புத்தகம் கொடுத்தபோது, ஒரு பெரியவர் கையில் கம்புடன் வந்து நீங்க யாரைக் கேட்டு இங்கு வந்தீர்கள். வந்த பாதையிலே ஓடுங்கள் என்று எங்களை விரட்டினார். ஆனால் அதே வேளையில் அங்குள்ள சில வீடுகளிலிருந்த சகோதரிகள் எங்களை கூப்பிட்டு அவர்களுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். மதிய வேளையில் பசியோடு நடந்து சென்றதை பார்த்த ரேஷன் கடை ஊழியர் எங்களுக்கு 3 பாக்கெட் பிஸ்கட் வாங்கிக் கொடுத்தார். 915 யோவான் புத்தகங்களும், 750 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 2:</u>சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், தேவநேசம், கிளமெண்ட்ஸ்மேரி, ஜோதிமணி.**

எங்களுக்கு கொடுத்த 12 கிராமங்களில் ஊழியம் செய்தோம். அய்யம்பாளையம் கிராமத்தில் பைக்கில் வந்த ஒருவர் எங்களை எங்கு போகிறீர்கள் மதம் மாற்றம் செய்ய போகிறீர்களா ? கிராமங்களில் நாய்கள் அதிகமாக உள்ளது. உங்களை கடித்து விடும். ஆகவே திரும்பி போய்விடுங்கள் என்று சொல்லி வாக்குவாதம் பண்ணினார். கடைசியில் இயேசுவைப் பற்றி கூறிய போது யோவான் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டார். ஜெபிக்க கேட்ட மக்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 830 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 3:</u> சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, சலோமி சம்மனசு.**

நாங்கள் 8 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். யாரும் வேண்டாம் என்று சொல்லாமல் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். பலருக்கு கொடுத்தோம். சிலர் ஆண்டவரை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 4:</u> சகோ.மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன், செல்வராயர் பால், ஸ்டீபன்ராஜ்.**

பாச்சல், தவுண்டம்பாளையம், சந்திரசேகரபுரம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். முத்துகாளிப்பட்டியில் ஒரு பெண் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கி பார்த்து விட்டு இதை வாசிப்பதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள் எனக் கூறி புத்தகத்தை திரும்ப கொடுத்து விட்டார். ஒரு சகோதரன் ரோட்டு ஓரத்தில் அமர்ந்து பீர் குடித்துக் கொண்டு, நீங்கள் ரோடு அளக்கிறவர்களா ? என்று கேட்டார். நாங்கள் இயேசுவைப் பற்றி சொல்ல வந்தோம் என்றோம். அதற்கு அவர் உங்கள் மதத்திற்கு ஆள் சேர்க்க வந்தீர்களா ? என்றார். நாங்கள் மக்களை மனம் மாற்ற வந்தோம் எனக் கூறி அவருக்கு சுவிசேஷம் கூறினோம். மொத்தம் 956 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 5:</u> சகோ. அருள்ராஜ், அந்தோணி, எபிநேசர், சகாயராஜ், ஜான் முத்துமணி.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று அங்குள்ள வீடுகளுக்கு யோவான் சுவிசேஷம் கொடுத்து, நற்செய்தியை அறிவித்தோம்.

உடுப்பத்தான்புதூர் கிராமத்தில் ஊழியம் செய்துவிட்டு அங்கிருந்த ஒரு வீட்டிற்கு முன் இருந்த வாசலில் அமர்ந்து கொஞ்ச நேரம் இளைப்பாறி விட்டு சென்றோம். பிறகு அந்த வீட்டின் உரிமையாளர் எங்களை தேடிவந்து என் வீட்டின் நிழலில் எப்படி ஒய்வு எடுக்கலாம் என்று கோபமாக சத்தம் போட்டார். நாங்கள் அவரிடம் பதில் சொல்லிவிட்டு கடந்து வந்தோம். இன்னொருவர் எங்களிடம் வந்து நாங்கள் மூன்று பேர் உங்கள் கிறிஸ்துவில் வந்து விடுகிறோம். நீங்கள் ஒருவராவது எங்கள் இந்துவில் சேருவீர்களா ? என்று எங்களிடம் வாக்கு வாதம் செய்தார். மொத்தம் 680 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 6: சகோ. பிரேம் ஆனந்த், ஸ்டேன்லி, அன்புராஜ், இஸ்ரவேல், ஜேசுதாஸ்.**

அத்தனூார் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி கொடுத்தோம். யாவரும் இயேசுவை நேசித்து ஏற்றுக் கொண்டனர். இயேசு யார் என்று இதுவரை அறியாதிருந்தவர் களும் அறிந்து கொண்டு, நாங்கள் சொல்லி கொடுத்த பாவமன்னிப் பிற்கான ஜெபத்தை சொல்லி ஜெபித்தார்கள். 1004 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 7: பாஸ்டர் ஆல்வின், சகோ. ஜெபமலைநாதன், இஸ்தாக்கி, பீட்டர் ராமலிங்கம், தாவீது.**

பனங்காட்டூர், மனியப்பாரன்குட்டை, சின்ன பனங்காட்டூர், கரடியானூார் கிராமங்களில் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். ஒரு வீட்டில் இருந்த பெரியவரிடம் யோவான் புத்தகம் கொடுத்த போது, அவர் எங்களைப் பார்த்து ஏண்டா உங்களுக்கு அறிவில்லையா ? இப்படி வீடுவீடாக அலைகிறீர்களே, போங்கடா வெளியே என்று கோபத்தோடு திட்டினார். நாங்கள் எதிர் பேசாமல் போய் விட்டோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 820 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 8: சகோதரி டோரா லாசர், சீலா, லூாயிஸ், ஜெபமணி, சமாதானமேரி.**

நாங்கள் போன கிராமங்களில் எதிர்ப்புகள் அதிகமாக காணப்பட்டது. நாங்கள் கொடுத்த புத்தகத்தை இது என்ன, நீங்களே எடுத்துக் கொண்டு போங்கள் என்று திட்டினார்கள். ஒரு வாலிபன் மனக் கவலையோடு உட்கார்ந் திருந்தான். அவனிடம் விசாரித்தபோது அவன் மனைவி அவனை சாக சொல்கிறாள். அவளிடம் கீழ்படிதலில்லை என்று துக்கத்தோடு சொன்னான். அவனிடம் இயேசுவின் அன்பை சொல்லி ஜெபித்து ஆறுதல் கூறினோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9: சகோ.தாஹாகனி,ஆரியப்பன், ஜோசப் பெஞ்சமின், யோசுவா.**

செல்லப்பம்பட்டி கிராமத்தில் ஒரு தாயார் எங்களை அன்போடு வரவேற்று சுவிசேஷத்தைக் கேட்டு இயேசுவுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தார்கள். பேளுக்குறிச்சி கிராமத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, ஒரு சகோதரி பணம் வசூல் பண்ண வந்து விட்டீர்களா என்று எங்களை விரட்டினாள். ஆனால் பலர் ஆர்வமுடன் சுவிசேஷம் கேட்டார்கள். பலருக்கு கர்த்தர் விடுதலையைக் கொடுத்தார். சுப்பிரமணி என்பவரிடம் மெய்யான கடவுள் இயேசு என்று கூறிய போது, அவர் விக்கிரகங்களை வழிபடும் நான் எப்படி மெய்யான தெய்வத்தை அறிந்து கொள்வது ? என்று கேட்டார்.

அவருக்கு **இயேசு தான் மெய்யான தெய்வம்** என்று வேதவாக்கியங்களை காட்டி விளக்கிச் சொன்னோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 10:</u> சகோதரி T. மரியம்மாள், தெரசாபேபி, அந்தோணியம்மாள், பாக்கியம்.**

கோனேரிபட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். ஒரு சன்னியாசி யிடம் புத்தகம் கொடுத்து,**இயேசுவே மெய்யான தெய்வம்** என்று சொன்ன போது அவர் **அது உண்மை தான் என்று ஒத்துக் கொண்டார்**. முந்தின நாள் நாங்கள் கொடுத்த புத்தகத்தை ஒரு வீட்டின் மாடியிலிருந்து ஒரு அம்மா குப்பைத் தொட்டியில் போட்டிருக்கிறாள். நாங்கள் அவ்வழியாக சென்றபோது அந்த குப்பைத்தொட்டியில் கிடந்த புத்தகத்தை எடுத்து தூசி தட்டிக் கொண்டிருக்கும் போது அந்த மாடி வீட்டின் கீழே குடியிருந்த ஒரு அம்மா அந்த புத்தகத்தை என்னிடம் தாருங்கள் என்று கேட்டு வாங்கினாள். மேல் வீட்டுக்கு போக வேண்டிய ஆசீர்வாதம் கீழ் வீட்டுக்கு போய்விட்டதே என்று சொல்லி கடந்து போனோம். 950 சுவிசேஷப் புத்தகங்களும்,850 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 11:</u> சகோதரி எஸ்தர்,தெபோராள், அன்னாள், பிச்சையம்மாள், மலர்கொடி.**

நரசிங்கன்புதூர் கிராமத்தில் தங்கியிருந்து சுற்றியிருந்த கிராமங்களில் புத்தகம் கொடுத்தோம். நல்ல வரவேற்பு இருந்தது. அநேக வியாதியஸ்தர்களுக் காக ஜெபித்தோம். அநேக விதவைகளை சந்தித்து, சுவிசேஷம் கூறி ஜெபித்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 860 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 12:</u> சகோதரி கிரேஸ் பத்மா, அன்னக்கிளி, ஆரோக்கியம், கிருபா பழனியம்மாள்.**

குருக்கபுரம், எல்லப்பாளையம், அழகாபுரம், பாலப்பாளையம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் வாஞ்சையுடன் வாங்கிக் கொண்டார்கள். சிறு பிள்ளைகள், பள்ளி மாணவர்களுக்கு ஜெபித்து உற்சாகப்படுத்தினோம். சிலர் சபைக்கு வருவதாக சொன்னார்கள். 1080 சுவிசேஷப்புத்தகங்களும், 910 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

**2008 நவம்பர் மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : கன்னியாகுமரி
யூனியன் : தோவாளை
நாள் : 15.11.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**<u>நடைபெறும் இடம்</u>**

**பாஸ்டர் . ஜான் E. கிறிஸ்டோபர்**
**கிறிஸ்துவின் கிருபை ஊழியங்கள்**
**ஆரல்வாய்மொழி மெயின் ரோடு**
**முத்து நகர்**
**தோவாளை - 629 302.**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**போன் : 04652 262759**
**செல் : 94432 10110**

**யோவான் சுவிசேஷப் புத்தகம் தேவை !**

நம்முடைய 100–கிராம ஊழியத்திற்கும், AJC நடமாடும் சுவிசேஷக்குழுவிற்கும் மற்றும் கிராம ஊழியங்களுக்கும் 200,000 யோவான் சுவிசேஷப் புத்தகம் அவசரமாக தேவை. ஜெபியுங்கள்.

**ஒரு புத்தகத்தின் விலை – ரூ.1**

நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

# துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்:

1. Bro. **மதன்ராஜா, புதுக்கோட்டை,**

நான் B.Sc.,தேர்வின் வெற்றிக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தேர்வில் வெற்றி பெற செய்தார்.

2. Sis. **தேவி, தஞ்சாவூர்.**

என் திருமணகாரியம் அநேக வருடங்களாக தடைப்பட்டு கொண்டிருந்தது. தங்களுக்கு ஜெபிக்க கடிதம் எழுதினேன். நானும் ஆகஸ்டு மாத பத்திரிக்கையின் வாக்குத்தத்தம் **'கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்'** என்ற வசனத்தை விசுவாசித்து ஜெபித்தேன். கர்த்தர் அந்த வாரத்திலேயே எனக்கு திருமணகாரியங்களை ஒழுங்குப்படுத்தி தந்தார்.

3. Sis. **சரஸ்வதி, ஈரோடு.**

என் மகளின் திருமணத்திற்கு நல்ல வரன் கிடைக்க ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 01.09.08 அன்று திருமணம் நடைபெற செய்தார்.

4. Bro. **வீரமுத்து, நாமக்கல்.**

என் மனைவிக்கு கிட்னி பிரச்சனை மாறவும், பட்டுத்தொழில் வளர்ச்சியடையவும் ஜெபிக்க கடிதம் எழுதினேன். தங்கள் ஜெபத்தினால் மனைவிக்கு நல்ல சுகம் கிடைத்தது. பட்டுத்தொழிலும் வளர்ச்சியடைந்துள்ளது.

5. Sis. **மோகனா, காஞ்சிபுரம்.**

எனக்கு திருமணத் தடை நீங்க ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு திருமணத்தை வாய்க்கச் செய்தார். இப்போது 9 மாதம் கர்ப்பமாக உள்ளேன்.

6. Sis. **அனிதா, புதுக்கோட்டை.**

நான் B.Ed. தேர்வில் எல்லா பாடங்களிலும் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு முதல் வகுப்பில் தேர்ச்சி பெற செய்தார். தேவனுக்கே மகிமை.

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்:

1. Sis. **செலின்மேரி, ராம்ராடு.**

என் மகனுக்கு குழந்தைபாக்கியம் கிடைக்க ஜெபிக்கக் கேட்டிருந்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 23.08.08ல் ஆண்குழந்தையை கொடுத்தார்.

2. Sis. **லீமாரோஸ், தஞ்சாவூர்.**

எனக்கு 100–கிராம ஊழியம் பத்திரிக்கை ஆறுதலாக இருந்தது. +2 முடித்ததற்கு அரசாங்கத்திலிருந்து உதவித்தொகை தருவதாக கூறியதால் 5 வருடமாக அலைந்தேன். பணம் கிடைத்தால் 100–கிராம ஊழியம் உண்டியலில் ரூ.100/–காணிக்கை செலுத்துவதாக ஜெபித்தேன். கர்த்தரின் கிருபையால் பணம் கிடைத்து விட்டது.

3. Sis. **ஜெயலெட்சுமி, திருச்சி.**

எனது வலது கண் பார்வை, தோல் வியாதி, இடது கை உடைந்தது அறுவை சிகிச்சை இல்லாமல் குணமாகி எந்த தடையுமில்லாமல் திருமணம் நடைபெற ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தரின் கிருபையால் அனைத்தும் அற்புதமாக, ஆசீர்வாதமாக நடைபெற்றது.

4. Sis. **சாராள், நெல்லை.**

என் பேரப்பிள்ளைகளின் படிப்பிற்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார்.

## TVGM ஸ்தாபகரிடமிருந்து . . . . . . . . . . . .

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

தேவசமாதானம் உண்டாவதாக!

உங்கள் அன்பை நினைக்கும்பொழுதெல்லாம் தேவனைத் துதிக்கிறேன்.

TVGM ஊழியமானது முக்கியமாக 3 வகைகளில் செயல்படுகிறது.

1. மாதந்தோறும் 100 ஆலயமில்லாத கிராமங்களில் 10,000 குடும்பங்களுக்கு யோவான் சுவிசேஷம் இலவசமாக வழங்கி, பின்தொடர்பணி செய்தல்.

2. ஆலயமில்லாத கிராமங்களில் சபைகளை உருவாக்கி, வாடகை வீடுகளில் ஆராதனை நடத்தி வரும் ஊழியர்கள் நிலம் வாங்கின பின்பு சபையார் ஒத்துழைப்புடன் 15’X30’= 450 சதுர அடியில் 50 பேர் ஆராதிக்கக்கூடிய ஜெபவீடு கட்டிக் கொடுக்க முயற்சிக்கிறோம்.

3. ஏறத்தாழ 70 தாய் அல்லது தந்தை இல்லாத பிள்ளைகளுக்கு உணவு, உறைவிடம், உடை, படிப்பு யாவும் இலவசமாக வழங்கி வருகிறோம். அத்துடன் தொழுநோயாளர், விதவைகளுக்கு சிறுசிறு உதவிகள் செய்து வருகிறோம். தொடர்ந்து ஜெபியுங்கள்.

2008 அக்டோபர் 2 **அண்டகுளம்** ஜெபவீடு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கர்த்தருடைய கிருபையினால் தற்சமயம் 4 இடங்களில் ஜெபவீடு கட்டப்பட்டு வருகிறது. பிரதிஷ்டை ஆராதனை நடைபெற ஜெபியுங்கள்.

2008 நவம்பர் 11 மாலை 6 மணி முத்துநகர் AJC ஜெபவீடு பிரதிஷ்டை
2008 நவம்பர் 12 மாலை 4 மணி சென்னிமலை ஜெபவீடு பிரதிஷ்டை
2008 நவம்பர் 13 காலை 11 மணி வேந்தன்பட்டி ஜெபவீடு
2008 நவம்பர் 14 காலை 11 மணி கும்மனந்தொழுவு ஜெபவீடு

திருச்சியிலுள்ள **தாயனுார்,** நெல்லை மாவட்டத்திலுள்ள **கோடாவிளை, காவூர்,** நாமக்கல்லிலுள்ள **கோழிக்கால்நத்தம்,** புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள **விராச்சிலை** ஆகிய ஐந்து கிராமங்களிலும் TVGM மூலமாக செலுத்த வேண்டிய முழு பணங்களும் செலுத்தப்பட்டு விட்டது. விரைவில் கட்டி முடிக்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

தற்சமயம் சென்னை–( **மிஞ்சூர்** ), நாமக்கல்–( **வையப்பமலை** ), ஆகிய இரண்டு இடங்களிலும் ஜெபவீடு கட்ட ஆரம்பித்துள்ளோம்.

நாங்கள் நேரடியாக போய் பார்வையிட்டு வந்தும், கட்டிட வேலை ஆரம்பிக்க பொருளாதாரம் இல்லாமல் இருக்கும் புதுக்கோட்டையிலுள்ள **தென்நகர், அக்ரஹாரம்,** சேலத்திலுள்ள **AMC காலனி**, திருச்சியிலுள்ள **பொன்மலைப்பட்டி, சூரியக்குடி, பெருவளநல்லூார்,** நாமக்கல்லிலுள்ள **தொட்டியம்**, பெரம்பலுாரிலுள்ள **அகினேஷ்புரம்** கிராமங்களுக்காக ஜெபியுங்கள்.

புதுக்கோட்டையிலுள்ள **ஆலங்குடி, சிப்காட்,** கடலுாரிலுள்ள **காட்டுமன்னார்குடி** ஆகிய மூன்று கிராமங்களையும் பார்வையிட்டோம்.

கோவை – **குருவகுளத்தில்** ஜெபவீடு திறக்க அனுமதிக்கவில்லை.

***ஜெபியுங்கள்! துதியுங்கள்! மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்!***

# 100 கிராம ஊழிய திட்டத்தின் கீழ்
# புதுக்கோட்டை மாவட்ட சுவிசேஷப் பணி
# AJC - நடமாடும் சுவிசேஷக் குழு



கர்த்தருடைய கிருபையினால் புதுக்கோட்டை மாவட்டம் – **குன்றண்டார்கோவில்** யூனியனில் 28.07.2008 முதல் 30.07.2008 வரை '100 கிராம ஊழியம்' ஆசீர்வாதமாக நடைபெற்றது.

AJC ஊழியர்கள் 14 பேர் 3 நாட்கள் பங்கேற்றனர். இந்த ஊழியத்தின் மூலம் 3750 வீடுகளுக்கு **யோவான் சுவிசேஷப் புத்தகம்** மற்றும் **சிலுவைக் கொடிகள்** இலவசமாக வழங்கப்பட்டு, தபால் மூலம் வேதபாடம் அனுப்ப முகவரிகள் சேகரிக்கப்பட்டன.

## கிராம ஊழியர்களின் சில முக்கிய அனுபவ சாட்சிகள்:-

**குழு 1 சகோ. கலைவாணர், பால் சுரேஷ்:–** நாங்கள் மங்கலத்துப்பட்டி, குறிஞ்சாபட்டி,பனவயல்,புதுக்குடிப்பட்டி,மழையப்ப காலனி, ஆயாவயல் கிராமங்களில் **யோவான் சுவிசேஷம்** வீடுகள்தோறும் வழங்கி ஊழியம் செய்தோம். அநேக பெண்கள் கூடி ஜெபித்தனர். அநேகர் தொடப்பட்டனர். 30 சிறுபிள்ளைகள் கூடி பாடல்பாடி ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். பனவயலில் கழுத்தில் கட்டி மற்றும் காலில் வலி உள்ளவர்களுக்காக ஜெபித்து, இயேசுவைப் பற்றி கூறினோம். அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்.

**குழு 2 சகோ. ஜேசுதாஸ், சார்லஸ்:–** பழைய வீரக்குடி கிராமத்தில் சென்று சுவிசேஷம் அறிவித்தபோது, ஆர்வமுடன் கேட்டனர். ஆலயம் வருவதாக கூறினர். **இச்சடிப்பட்டி** கிராமத்தில் அநேகருக்கு இயேசுவைப் பற்றி சொன்னோம். சரீரத்தில் பலவித வலி, குடும்ப பிரச்சனை உள்ளவர்கள் மற்றும் வாய் பேசாத ஒருவருக்காக ஜெபித்தோம். **திருப்பூரில்** சுவிசேஷம் அறிவித்தபோது கணேசன் என்பவர் ஆர்வமுடன் கேட்டு ஆலயம் வருவதாக வாக்குக் கொடுத்தார். எதிர்ப்புகள் அதிகம் இல்லை. **கோவில் வீரக்குடி** பகுதியில் **ராஜி** என்கிற பெண்ணிடம் இயேசுவைப் பற்றி சொன்னபோது, நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றாள். ஒருவர் 'எங்க தெய்வம் என்ன செய்யும்' என்றார். அவருக்கும் இயேசுவைப் பற்றி சொன்னோம். அங்குராபட்டி கிராமத்தில் ஒரு வாலிபர் எங்களுக்கு புக் எதுவும் வேண்டாம் என்றார். பூச்சுக்குடி வயலில் வடிவேல் மற்றும் நண்பர்களிடம் இயேசுவைப் பற்றி சொன்னபோது ஆலயம் வருவதாகச் சொன்னார்கள். தெம்மாவூரிலும் அநேகருக்கு சுவிசேஷம் சொன்னோம்.

**குழு 3 சகோ. கிறிஸ்டோபர், அன்பரசன்:–** பெரம்பூர் பஞ்சாயத்திலுள்ள **புதுப்பட்டி, ஆலங்காப்பட்டி** கிராமங்களில் ஊழியம் செய்தோம். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தங்கவேலுவை சந்தித்தோம். அவர் பக்கவாதத்தினால் படுத்த படுக்கையாக இருக்கிறார். இயேசுவைப் பற்றி கூறினோம். உற்சாகமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு ஜெபிக்கும்படி சொன்னார். எண்ணெய் பூசி ஜெபித்தோம். மிகுந்த சந்தோஷம் என்று சொன்னார். பெரம்பூர் கிராமத்தில் காலனி தெருவில் கூடியிருந்த 10 பேருக்கு சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். ஒரு சிலர் மட்டும் ஏற்றுக் கொண்டனர்.

சரீர வளர்ச்சியற்ற ஒரு வாலிப பெண்ணுக்கு பெற்றோரின் அனுமதியுடன் சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். இயேசுவை ஏற்றுக் கொண்டனர். சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும் சுவிசேஷப் புத்தகங்களை முழுவதுமாக கொடுக்கவும், சுவிசேஷம் சொல்லவும் கர்த்தர் கிருபை செய்து பாதுகாத்தார்.

**குழு 4 பாஸ்டர் லாரன்ஸ், சகோ. ஜீவசுந்தர்: –** வைத்தூர் பகுதியை மையமாக வைத்து ஊழியம் செய்தோம். வைத்திகோவில் பகுதியில் ஜனங்கள் மனக் கடினமுள்ள வர்களாய் புத்தகத்தை வாங்கவில்லை. சிலர் ஏற்றுக் கொண்டனர். பிசாசு பிடித்த ஒரு சகோதரிக்காக ஜெபித்தோம். ஆலயம் வருவதாக சொன்னார். வைத்தூர் பகுதியில் புத்தகங்கள் கொடுக்கவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் தேவன் திறந்த வாசலை வைத்திருந்தார். காலனி பகுதியில் சிறுவர்களுக்கு பாட்டு சொல்லிக் கொடுக்கப்பட்டது. பொக்கிஷக்காரன் பட்டியில் ஜனங்கள் ஆர்வமுடன் புத்தகம் பெற்றுக் கொண்டனர். சிறுவர்கள் **இயேசு கொடி பறக்குது** என்று கோஷமிட்டபடி எங்கள் பின் வந்தனர். தீராத அரிப்பு வியாதியில் அநேக மருத்துவரிடம் சென்றும் குணமடையாத நிலையிலிருந்த சுசிலா என்ற சகோதரிக்காக நாங்கள் ஜெபித்தோம்.

**குழு 5 சகோ. ஆரோக்கியசாமி, நேசகுமார்: –** வந்தனக்கோட்டை பஞ்சாயத்திலுள்ள பாரதிநகர் காலனி, குன்றாண்டார்கோவில் பகுதிகளில் எவ்வித தடங்கலுமின்றி சுவிசேஷத்தை வாஞ்சையாக ஏற்றுக் கொண்டனர். புனிதவல்லி, பிரியாதேவி என்பவர்கள் வீட்டில் ஜெபித்து, 2 பேருக்கு பேய் விரட்டினோம். அங்கிருந்து வரும்போது ஒருவர் 'வீட்டிற்கு வராதே, ரோட்டோடே போ, மதம் பரப்புகிறீர்களா' என்றார். புஷ்பா என்பவர் அண்டகுளத்தில் சபை இருப்பது தெரியாமல் இலுப்பூர் போனோம். இங்கு சபை இருப்பது அதிக சந்தோஷம் என்றார். வந்தனக்கோட்டையில் ஒருவர் 'நேற்று தான் நான் இயேசு கடவுளை நினைத்தேன், இன்று நீங்கள் வந்திருக்கிறீர்கள்' என்று சொல்லி இயேசுவை ஏற்றுக்கொண்டார். கூடூரில் அநேகர் ஏற்றுக் கொண்டனர். சிலர் இயேசு கோயிலுக்கு வந்தால் மாத்திரை தந்து ஊசி போடுவார்களா ? என கேட்டார்கள்.

**குழு 6 சகோ.ஐசக், இம்மானுவேல்: –** செனயக்குடி பஞ்சாயத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது மக்கள் ஆர்வமுடன் வாங்கினர். ஒரு கொத்தனார் 'இது என்ன ?' என்று கேட்டார். அவரிடம் இயேசு செய்த அற்புதங்கள் குறித்தும், எங்களது சாட்சியைக் குறித்தும் பேசினோம். அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆலயம் வருவதாக கூறினார். லெட்சுமி என்ற சகோதரி தனக்கு 6 மாதமாக இடுப்பு மற்றும் கால்வலி இருப்பதாகவும் ஆண்டவர் சுகம் தருவாரா என்றும் கேட்டார். தருவார் என்று சொல்லி ஜெபித்தோம். இயேசு அற்புத சுகம் கொடுத்தார். அந்த இடத்திலேயே மேலும் அநேகருக்கு ஜெபித்தோம். தேவன் அற்புதமாய் அநேகருக்கு சுகம் கொடுத்தார். 2 வருடமாக சுகர் வியாதியுள்ள ஒருவருக்காக ஜெபித்தோம். 15 நாட்களாக அவருக்கு இருந்த அல்சர் வியாதி நீங்கியது. ஆலயம் வருவதாகச் சொன்னார்.

**குழு 7 சகோ. ராஜா, ஜெனின்: –** நெய்வேலி கிராமத்தில் ஒரு சகோதரி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பின்மாற்றத்தில் இருந்தார். இயேசுவைப் பற்றி கூறியதும் மீண்டும் இயேசுவிடம் சேருவதாகவும், ஆலயம் வருவதாகவும் உறுதி கூறினார். நடக்க முடியாதவராக இருந்த சண்முகவேல் என்பவர் தொடர்ந்து தனது வீட்டில் வந்து ஜெபிக்க கேட்டுள்ளார். ஒரு இந்து கோயிலில் கோடங்கி அடித்து, குறி சொல்லிக் கொண்டிருந்த சாமி ஆடிக்கும், அவரிடம் குறி கேட்டுக்கொண்டிருந்த ஒரு சிலருக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். **தேவனுக்கே மகிமை !**

# TVGM Website: www.tvgm.org

தேவனுடைய கிருபையினால் TVGM வெப்சைட்டை **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** தன்னால் இயன்ற அளவு மிக சிறப்பாக Design செய்துள்ளார். அநேகர் அதை பார்வையிட்டு தங்கள் மகிழ்ச்சியை எங்களுடன் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இண்டர்நெட் வசதியுள்ள அநேக கர்த்தருடைய பிள்ளைகள் TVGM ஊழியத்தை அதிகமாக நேசித்து, ஜெபித்து, பொருளுதவியினால் தாங்கி வந்தாலும் இதுவரையிலும் TVGM வெப்சைட்டை பார்க்காதது போல் தெரிகிறது. இதற்கு காரணம் அதில் என்னென்ன காரியங்கள் உள்ளது என்பதை நாங்கள் பத்திரிக்கையில் வெளிடயிடாததே முதல் காரணம் என நினைக்கிறோம். ஆதலால் உங்களுக்கு TVGM வெப்சைட்டில் என்னென்ன அம்சங்கள் உள்ளன என்பதை இந்த இதழ் மூலம் தெரியப்படுத்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

1. தினந்தோறும் கர்த்தருடைய வாக்குத்தத்தம் தமிழ் / ஆங்கிலம்
2. மாதந்தோறும் நடைபெற்ற TVGM நிகழ்ச்சிகள் போட்டோக்களுடன்
3. 100–கிராம ஊழியம் மாதாந்திர பத்திரிக்கை தமிழ் / ஆங்கிலம்
4. சகோ.பி.டி.கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி 25 வருட அனுபவசாட்சி
5. முத்தான 100 வாக்குத்தத்தங்கள் / தேவசெய்தியுடன்
   ( இதுவரை மாதந்தோறும் **100 கிராமஊழியம்** பத்திரிக்கையில் வெளிவந்தவை)
6. சகோ.பி.டி.கிறிஸ்டோபர் எழுதி ராகம் அமைத்த 7 தமிழ் பாடல்கள்
7. TVGM டாக்குமெண்டரி வீடியோ 10 நிமிடம் ( அனைத்து ஊழியங்கள் )

இன்னும் பலவிதமான நிகழ்ச்சிகள்.

இப்பொழுது உங்களுக்கு விருப்பமான பகுதியை திறந்து பார்த்துவிட்டு, ஜெபத்துடன் உங்கள் கருத்துகளை Email மூலம் எங்களுக்கு தெரியப்படுத் துங்கள். உங்கள் நண்பர் ஒருவருக்காவது அறிமுகம் செய்யுங்கள்.




**நன்றி:** 01.10.2008 அன்று வாக்குத்தத்த தேவசெய்தியுடன் துதி ஆராதனையில் பெரும் பங்கேற்று நடத்தி தந்த **பாஸ்டர் ரவி & குழுவினருக்கு** எங்கள் நன்றி.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை / தேவசெய்தி

**பாஸ்டர் .பவுல் & சகோதரி ரீட்டா வையப்பமலை.**

**நாள் :** நவம்பர் 1 சனி காலை 7 முதல் மாலை 7 மணி வரை

**வாக்குத்தத்தசெய்தி:** மாலை 7 – 8

**குறிப்பு:** பாஸ்டர் பவுல் விசேஷித்த குணமளிக்கும் வரம் பெற்ற தேவ மனிதர். ஆதலால் வாக்குத்தத்த ஜெபம் முடிந்தவுடன் வியாதியஸ்தர்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும்.

# நாட்டு நடப்புச் செய்திகள்

1.கவுகாத்தியில் முதன் முறையாக குண்டு துளைக்காத ரயில் இஞ்சின் மூலம் ரயில் போக்குவரத்து துவங்கியுள்ளது.

2.ஒரிசாவில் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து, அனைத்து கிறிஸ்தவ போராட்டக்குழு சார்பில் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

3. மாவட்ட மையங்களில் இருந்து ஆன்லைன் மூலம் பாஸ்போர்ட் விண்ணப்பிக்கும் முறை இந்தியாவில் முதல் முறையாக திருச்சியில் அறிமுகம்.

## தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** TVGM தலைவர் **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** வெளிநாட்டு படிப்பை முடித்து வெற்றியோடு திரும்பி வர கிருபை செய்த தேவாதி தேவனைத் துதியுங்கள்.

தொடர்ந்து 2008 நவம்பர் முதல் TVGM ஊழியத்தின் முழு பொறுப்பையும் ஏற்று நடத்த தேவ கிருபைக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி ஆகிய இருவரையும் கடந்த 30 வருடங்களாக தேவன் கிருபையாக பயன்படுத்தினதற்காக துதியுங்கள்.

2008 நவம்பர் முதல் TVGM நிர்வாக காரியங்களை ஒழுங்கும் கிரமுமாக **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** அவர்களுக்கு படிப்படியாக சொல்லிக் கொடுக்கவும், அதை நல்ல முறையிலே கற்று புதிய தரிசனத்தோடு கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற ஜெபியுங்கள்.

**புதன்:** கர்த்தருக்கு சித்தமானால் 29.04.2009 உடன் TVGM ஊழியம் ஆரம்பித்து 30 வருடங்கள் முடிவடை கிறது. இன்னும் 7 மாதங்கள் மட்டுமே உண்டு. ஒரு சிறப்பு **ஸ்தோத்திர ஆராதனை** ஒழுங்குப்படுத்தப்படவும், தொடர்ந்து **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** தனித்து இயங்க புதிய கிருபைகளை தேவன் அருளிச் செய்யவும், தேவைப் படும் இடத்தில் பெற்றோர் வலது கரமாக இருந்து உதவி செய்யவும் ஜெபியுங்கள்.

**வியாழன்:** கர்த்தருக்கு சித்தமானால் 2009 மே 1 முதல் TVGM புதிய கமிட்டி அமைக்கப்படவும், தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள் நிர்வாக கமிட்டியில் வரவும், செயல்படவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM நிர்வாகமானது சீராக செயல்பட ஒவ்வொரு துறைக்கும் நன்கு படித்த, அனுபவமுள்ள, ஆத்தும பாரமுள்ள பிள்ளைகளை கர்த்தர் கிருபையாக கொடுக்கும்படியாகவும், அவர்களுக்கு ஏற்ற உதவித்தொகை வழங்கப்பட TVGM பொருளாதார நிலை வளரவும், நிரந்தரமாக சேவை செய்ய கர்த்தரால் அழைக்கப்பட்ட பிள்ளைகள் TVGM ல் தொடர்பு கொள்ள கருத்தாய் ஜெபியுங்கள்.

**சனி:** TVGM ஊழியத்தில் இது வரையிலும் நடைபெற்ற ஊழியங்களைக் காட்டிலும் இனிவரும் நாளில் தேவனை மகிமைப்படுத்தக் கூடிய அநேக நல்ல உயர்ந்த திட்டங்களை கர்த்தர் கிருபையாக தரவும், அதை செயல்படுத்த பரிசுத்தத்தோடுகூடிய ஞானத்தையும், விவேகத்தையும், அர்ப்பணிப்பையும் கர்த்தர் கட்டளையிட ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TVGM –ஊழியத்திற்காக ஜெபித்து, உழைத்து வரும் பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிக்கவும்,2009–ல் அநேக புதிய ஆதரவாளர்கள்,தன்னார்வத் தொண்டர்கள், முழு நேர ஊழியர்களை கர்த்தர் எழுப்ப ஜெபியுங்கள்.

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு காணிக்கை அனுப்பும் முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)
ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம் தெரியப்படுத்துங்கள்.**

**Canara Bank Indian Financial System Code( IFSC ):CNRB 0001249**

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலக ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 2008 செப்டம்பர் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. எதிர்பாராத விதமாக CLC சபை மேல்மிடாலம் **பாஸ்டர் ரமேஷ்** என்பவரின் தொடர்பு கிடைத்ததினால் 14ம் தேதி அவருடைய சபையில் அறிமுகப்பணி செய்ய வாய்ப்பு கிடைத்தது. அவர் முழு ஒத்துழைப்பு கொடுத்து, அந்த சபையினர் ஊழியத்தை தாங்க ஆரம்பித்துள்ளனர்.

சுவிசேஷ ஊழியர்களில் ஒரு தாயார் பெலவீனப்பட்டதால் மாத இறுதியில் ஊழியம் தடைப்பட்டது. கர்த்தர் அவர்களை பெலப்படுத்தி மீண்டும் ஊழியங்களில் பயன்படுத்த ஜெபியுங்கள்.

அஞ்சுகிராமம் – ஸ்ரீலட்சுமிபுரத்தில் முதன்முறையாக மாதாந்திர வீடு சந்திப்பு ஊழியத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

புதிய அறிமுகப்பணிக்கு அனுதிமதி கேட்டு கொடுக்கப்பட்டுள்ள கடிதங்களுக்கு சாதகமான பதிலை எதிர்பார்த்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். தேவபிள்ளைகள் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். 30ம் தேதி நடுஇரவு ஜெபத்திற்கு வெளியிலிருந்து நம் தொடர்புகளில் சிலர் புதிதாக வந்து கலந்து கொண்டனர். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. தேவனுக்கே மகிமை!

5 / 3A கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424**
**போன் : 04652- 277251.**

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
ஒருங்கிணைப்பாளர்.
கன்னியாகுமரி மாவட்டம்.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER
TN / TR / 17 / 2006 - 2008 ( Inland )
LICENCED TO POST WITHOUT PREPAYMENT
TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

## ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்.

## TVGM சிறுவர் இல்லம் திருச்சி / கோடாவிளை (குண்டல் )





**சிறுவர் இல்லப் பிள்ளைகளை பொறுப்பெடுத்து மாதந்தோறும் தாங்கி வருபவர்களுக்கும், விசேஷ நாட்களில் உணவு மற்றும் அன்பளிப்பு வழங்கி உற்சாகப்படுத்தும் அனைவருக்கும் எங்கள் நன்றி :**

சகோ. சுப்ரமணியன் ( வீடு பிரதிஷ்டை), ஜெயக்குமார் (பிள்ளைகள் தேர்ச்சி), ராஜ்குமார் ( மகன் ஸ்டீவ் பிறந்தநாள் ), கோவிந்தராஜ் ( மகள் லீனா பிறந்தநாள் ), Sis. ஷீலா ( குழந்தை பிறந்ததற்காக), பாஸ்டர் பிரசாத், சகோதரி கமலா.

## TVGM தலைமை அலுவலக முகவரி

**ஜெபஉதவி மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**

MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
4 / 272, HUNDRED VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

*Website :*
www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി_ हन्ड्रेड विलेज मिनिस्ट्री